## கைத்தொழில்[1]

1984 இல் கைத்தொழிற்றுறையின் செயலாற்றமானது கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு பொதுவான அபிவிருத்தியைக் காட்டியது. இது, உயர் வளர்ச்சி வீதம், ஏற்றுமதிகளின் துரித விரிவாக்கம், தைக்கப்பட்ட ஆடைகள் துறையில் புதுப்பிக்கப்பட்ட முதலீடுகளினை வலியுறுத்தல், முதலீட்டாளரின் நம்பிக்கையை ஊக்குவித்தல் என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. உண்மையான நியதிகளில் கைத்தொழிற்றுறை வெளியீடுகள் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுக் கடந்த பத்தாண்டு காலத்தில் அதியுயர்ந்த வளர்ச்சி வீதத்தினை இவ்வாண்டில் பதிவு செய்தது. இச்சாதனையானது இவ்வாண்டுக் காலத்தில் தனியார் துறைக் கைத்தொழில்களின் முன்னேற்றமான செயலாற்றத்தினுல் ஏற்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் இத்தகைய அபிவிருத்தி மிகத் தெளிவாகவிருந்ததுடன் இது 43 சதவீத (சிஎஉ நியதிகளில் 38 சதவீதம்) வளர்ச்சியைப் பதிவு செய்தது.

1984 இன் துரித கைத்தொழிற்றுறை வளர்ச்சியானது, தனியார்துறை கைத்தொழில்களின் 26 சதவீத வளர்ச்சியிலிருந்தும், அரசதுறைகளின் 7 சதவீத வளர்ச்சியிலிருந்தும் ஏற்பட்டது. முன்னைய ஆண்டின் வெளியீட்டில் வீழ்ச்சியினைப் பதிவு செய்த அரசதுறைக் கைத்தொழில்கள், 1984 இல் முன்னேற்றமான வளர்ச்சியினைக் காட்டியதுடன், அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் கிட்டத்தட்ட 55 சதவீதத்தினைக் கொண்டிருக்கும் எண்ணெய் தூய்மியின் தடையற்ற இயக்கத்தினுல் இது குறிப்பாக ஏற்பட்டது. மொத்தக் கைத்தொழில்துறை வெளியீட்டின் முக்கிய பங்கானது எண்ணெய்த் தூய்மையாக்கல், புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் துறைகளிலிருந்து வருவதனுல் கைத்தொழிற்றுறையின் வளர்ச்சியானது இந்த இரண்டு கைத்தொழிற் துறைகளினதும் செயலாற்றத்தில் பெரிய அளவில் தங்கியிருந்தது. கைத்தொழில் துறையின் பொருளாதார நன்மைகள் உள்ளூரில் சார்புரீதியில் குறைவான கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் இரண்டு கைத்தொழில்களிலும் தங்கியிருக்க வைத்தல் விரும்பத்தக்கதல்லதாகையால் கைத்தொழில் உற்பத்தியின் பன்முகப்படுத்தலானது மிகுந்த கவனத்தை வேண்டி நிற்கின்றது.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளை ஒன்றுபடுத்தும் முகமாக மீளாய்வின் கீழான ஆண்டில் கைத்தொழிற்றுறை தொடர்பான சில கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்மாற்றங்கள் ஏற்றுமதி மயப்படுத்தப்பட்ட கைத்தொழிற்றுறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டவேளையில் இறக்குமதிக்கு பிரதியீடாகச் செயற்படும் உள்ளூர் கைத்தொழில்களுக்குப் போதியளவு பாதுகாப்பினையும் வழங்கக் கூடியதாயிருந்தது. 1985 வரவு செலவுத் திட்டத்தில் ஒரு ''அரை வரிவிடுமுறை''யானது சில தெரிந்தெடுக்கப்பட்ட மரபு ரீதியல்லாத ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு மேலும் 10 வருடங்களுக்கு வழங்கப்பட்டன. இச்சலுகையானது உள்ளூர் மூலப்பொருட்களையும் உயர்ந்த உள்ளூர் கூட்டப்பட்ட பெறுமதிகளையும் கொண்ட

---

1. கடந்த காலங்களைப் போன்றே 1984 இற்கான கைத்தொழிற்றுறையின் செயற்பாட்டுத் தரவுகள் அரச தனியார்துறைகளிலிருந்து பெரிய, நடுத்தர, சிறியதுமான தெரிந்ததும், பதிவு செய்யப்பட்டதுமான தெரிந்ததும், பதிவு செய்யப்பட்டதுமான தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு மத்திய வங்கியினுல் அனுப்பி வைக்கப்பட்ட கேள்விக் கொத்துக்களின் கூற்றுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டன. எனினும் இது தேசிய கணக்குகளில் தயாரிப்புத் தொழிலாகக் கணிக்கப்பட்ட பெருந்தோட்டத்துறையின் ஏற்றுமதி, பதனிடல் நடவடிக்கைகளை உள்ளடக்கவில்லை. பொதுவாகப் பதில்கள் மூன்றிலொரு பங்கினரிடமிருந்து கிடைத்தன. இவை பெரும்பாலும் பெருங் கைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தன. தரவுகள் கிடைக்காத பகுதிகளில் அரசு முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட தாகும். இதற்கு மேலாக கிராமிய கைத்தொழிற்றுறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், கிராமியத்துறையில் கூடிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் நோக்கில், கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 25 பேருக்கு மேற்பட்ட ஆட்களைத் தொழிலிலமர்த்தும் புதிய கைத்தொழில்களுக்கு மதிப்பிடப்பட்ட வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியளவுக்கு முதலீட்டுச் சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன.

மீளாய்வின் கீழான ஆண்டில் சில குறிப்பிடத்தக்க தீர்வை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சனுதிபதி தீர்வை ஆணைக்குழுவின் விதந்துரைப்புக் களின்படி இறக்குமதித் தீர்வை அமைப்பு திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஆணைக் குழுவானது உள்ளூர் கைத்தொழில்கள் மத்தியில் ஒரு பாதகமல்லாத தீர்வை அமைப்பின் மூலம் ஆற்றல் வாய்ந்த பெரிதும் உறுதியான பாதுகாப்பு மட்டங் களின் அடிப்படையில் தீர்வை மாற்றங்களை விதந்துரைத்தது. இந்தப் புதிய தீர்வைச் சீரமைப்புக்கள், ஏற்றுமதிகள் உற்பத்திகளுக்கெதிரான இடையூறுகளை அகற்றுவதன் மூலம், உள்ளூர் உற்பத்தியினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

## முதலீடு

முதலீட்டுத் துறையில் கைத்தொழில், அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில்கள், கடற்றொழில் அமைச்சுக்களில் உள்ள உள்ளூர் முதலீட்டு மதியுரைக் குழுக்கள் கடந்த ஆண்டின் 349 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் 474 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தன. 1984 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் கீழ் ரூ. 5,670 இலட்சம் முதலீடு செய்யப்படும் எனவும் ஏறக்குறைய 21,524 ஆட்களுக்குத் தொழில்நிலை வாய்ப் புக்களை அளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கிராமியக் கைத்தொழில் மதியுரைக்குழு 1984 இல் ரூ. 105 இலட்சம் முதலீடு உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட 3 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 1984 இல் 41 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்து, ரூ. 12,830 இலட்சம் மொத்த முதலீட்டினை எதிர்நோக்கியதுடன் அவற்றில் வெளிநாட்டு ஆக்கக் கூறு ரூ. 5,220 இலட்சமாக அமையும். இந்தச் செயற்றிட்டங்களின் மொத்தத் தொழில்நிலை உள்ளார்ந்த வளம் 8,785 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண் ணிக்கையில் 14 புடவையும் தைக்கப்பட்ட ஆடைகள் துறையிலும் காணப்பட்டது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 1984 இல் மொத்தமாக ரூ. 6,780 இலட்சம் உள்ளார்ந்த முதலீட்டு வளத்தினையும் கொண்ட 15 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகை யில் இரண்டு மடங்கு அதிகரிப்பினைச் சுட்டிக் காட்டியது. எனவே, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஆண்டின் இறுதியில் மொத்தம் 199 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவற்றில் 112 தொழில் முயற்சிகள் பல்வேறு கைத்தொழில்களை அமைப்பதற்கு, கொழும்பு பெரும்பாக பொரு ளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன.

உற்பத்தி

பொதுவான கைத்தொழில் வெளியீடு, கடந்த ஆண்டின் பதிவுசெய்யப்பட்ட 2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1984 இல் 15 சதவீதத்தால் குறிப்பிடத் தக்களவுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர்ந்த வீத வளர்ச்சியானது தனியார்துறை கைத்தொழில்களில் 26 சதவீத வளர்ச்சியினதும், அரசதுறைக் கைத்தொழில்களின் 7 சதவீத வளர்ச்சியினதும் விளைவாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு தவிர்ந்த, அரச தனியார் துறைகளின் மொத்தக் கைத்தொழில் வெளியீடானது 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உற்பத்தியில் அதிகரிப்பினைப் பிரதிபலித்த கைத்தொழில் துணைத் துறைகளாகப் புடவை, அணியும் ஆடையும் தோற்பொருட்களும் (44 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (24 சதவீதம்) இரசாயனம், பெற்றோலியமும், பிளாத்திக்கு உற்பத்திகளும் (18 சதவீதம்) தாளும் தாள் உற்பத்திகளும் (12 சதவீதம்) உணவு, குடிவகைகளும் புகையிலை உற்பத்திகளும் (3 சதவீதம்) என்பன விளங்கின. மறுபுறத்தில் அடிப்படை உலோக உற்பத்திகளின் வெளியீடு 31 சதவீதத்தாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 9 சதவீதத்தாலும், மரமும், மர உற்பத்திகளும் 8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.16

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1980--1984**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1980 | 1981 | 1982 | 1983 | 1984(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ... | 3,899 | 4,496 | 5,246 | 6,998 | 8,623 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 1,923 | 3,040 | 3,863 | 5,136 | 7,565 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 289 | 315 | 361 | 522 | 640 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 476 | 626 | 725 | 901 | 907 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 9,416 | 12,015 | 13,099 | 11,888 | 14,328 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) ... | 1,156 | 1,250 | 1,370 | 1,468 | 1,829 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 478 | 428 | 262 | 302 | 199 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 620 | 782 | 904 | 1,129 | 1,456 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 54 | 58 | 74 | 90 | 106 |
| மொத்தம் | 18,311 | 23,010 | 25,904 | 28,434 | 35,653 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

1984 இல் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதியானது நடைமுறை நியதிகளில் 1983 இன் 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலிய

உற்பத்திகளின் பெறுமதி நீங்கலாக கைத்தொழில் உற்பத்தி 1983 ஆம் ஆண்டுக்கு மேலாக 21 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது புடவை மற்றும் அணியும் ஆடைகள் துறையில் இருந்து கிடைத்ததுடன், ஏற்றுமதி சார்ந்த தைக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தி சிறப்பாக முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் புடவை ஆலைகள் என்பன 47 சதவீதம் கொண்ட மிகப் பெரிய அளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தன. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளும் (29 சதவீதம்) உணவு, குடிவகையும், புகையிலை உற்பத்திகளும் (23 சதவீதம்) மரமும், மர உற்பத்திகளும் (23 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (25 சதவீதம்) இரசாயனங்கள், பெற்றோலியமும், இறப்பர் உற்பத்திகளும் (21 சதவீதம்) என்பன பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. அடிப்படை உலோக உற்பத்திகள் 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

### வலுவும் எரிபொருளும்

1984 இல் வலுவினதும், எரிபொருளினதும் பாவனை பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கியது யாதெனில் கைத்தொழில் எரிபொருள் பாவனையில் ஏற்பட்ட 46 சதவீதங் கொண்ட கணிசமானளவு வீழ்ச்சியாகும். எனினும் இதற்கு இலங்கை மின் சபையானது, தமது வெப்ப மின்வலு உருவாக்கத்தின் குறைப்பின் விளைவாகப் பார டீசல் மற்றும் உலையெண்ணெய் நுகர்வில் ஏற்பட்ட குறைப்பே முழுக் காரணமாகும்.

1984 இல் பார டீசலின் விற்பனை இலங்கை மின் சபைக்கான விற்பனைகள் நீங்கலாக 12 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ள வேளையில், உலையெண்ணெயானது 1983 இற்கு மேலாக 1 சதவீதத்தால் சிறிதளவாக அதிகரித்தது. மின்வலு, தொடர்ந்து கைத்தொழிலில் மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலமாக விளங்கி மீளாய்வின் கீழான ஆண்டில் அதன் நுகர்வானது 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 1.17

**கைத்தொழிலில் வலு எரிபொருள் என்பவற்றின் பயன்பாடு 1982—1984**

| விடயம் | 1982 | 1983 | 1984(அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (ஆ) (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... | 739.1 | 752.0 | 788.3 |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... | 26.0 | 29.0 | 31.5 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... | 338.7 | 339.7 | 370.5 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... ... | 374.3 | 383.3 | 386.3 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ('000 மெற்றிக் தொன்கள்) | 412.2 | 538.6 | 293.5 |
| 2.1 பார டீசல் ... | 169.3 | 285.5 | 78.6 |
| 2.2 உலை எண்ணெய் ... ... | 242.9 | 253.1 | 214.9 |

மூலங்கள்: இலங்கை மின்சபை,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை

(ஆ) தயாரிப்பு ஏற்றுமதிச் செய்முறை கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் எனக் குறிப்பிட்டுள்ளவை 50 கி. வாட்டுக்கு குறைந்த இயலளவினைக் கொண்ட கூறுகளாகவும், நடுத்தரக் கைத்தொழில் 50-500 கி. வா. கொண்டவையாகவும் பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்டவையுமாகும்.

## அரசதுறைக் கைத்தொழில்

அரசதுறைக் கைத்தொழிலின் செயலாற்றத்தில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைத் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்தது. இலங்கை அரச வன்கல கூட்டுத்தாபனத்தினால் 1984 சனவரியில் புதிய மண்வெட்டி தயாரிப்புப் பொறித் தொகுதி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோ—கனடா பன்னாட்டுதவிக் கூட்டுத்தாபனத்துடன் ஆழ்கடலின் எண்ணெய் வளங்களைக் கண்டுபிடிப்பதற்கு புவிப்—பௌதிக அளவைகளை மேற்கொள்வதற்கான நிதி தொழில்நுட்ப உதவி பெறுவதற்கான உடன்பாட்டிற்கு 1984 மார்ச்சு மாதத்தில் வந்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, 1984 ஏப்பிறலில் ஒரு மூன்று நாடுகளின் கூட்டிணைப்புடனான ஒரு இணைந்த செயற்பாட்டு உடன்படிக்கைகளைச் செய்ததன்மூலம் 99 எண்ணெய்த் தாங்கிகளையும், மொத்தம் 10 இலட்சம் மெற்றிக் தொன்கள் இயலளவையும் கொண்ட திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளின் பண்ணையை மறுசீரமைத்து, அதனைப் பன்னாட்டு எண்ணெய்த்தாங்கிருப்புத் தொகுதியாகத் தரமுயர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

### அட்டவணை 1.18
### அரசதுறை முதன்மைக் கைத்தொழில் வெளியீட்டுச் சுட்டெண் (1977 = 100)

| வகை | 1982 | 1983 | 1984(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 83.6 | 73.6 | 56.7 |
| 2. புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 135.7 | 127.0 | 141.2 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 151.0 | 163.1 | 149.1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 133.3 | 135.7 | 117.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 133.1 | 105.2 | 125.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 131.5 | 125.1 | 109.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 106.3 | 109.7 | 75.5 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 96.3 | 76.8 | 86.2 |
| எல்லா வகைகளும் | 124.6 | 106.7 | **113.8** |


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

உண்மை நியதிகளில் அரச துறைக் கைத்தொழிற் தொழில் முயற்சிகளின் பொதுவான வெளியீடு 1983 இல் பதிவு செய்யப்பட்ட 15 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 1984 இல் 7 சதவீதத்தால் அதிகரித்தது. 1984 இல் எந்தவித மூடுதலும் இல்லாமல் தொடர்ந்தும் இயங்கிய பெற்றோலியத் தூய்மியின் வெளியீட்டில் ஏற்பட்ட 22 சதவீத உயர்வே இந்த அதிகரிப்பினது முக்கிய காரணமாகவிருந்தது. மீளாய்வின் கீழான ஆண்டில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீடு (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த) 8 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கடந்த ஆண்டினைப் போலவே அரச கூட்டுத்தாபனங்களின் செயலாற்றம் சீரற்றதாகவிருந்தது. வெளியீட்டில் அதிகரிப்புக்களைக் காட்டிய கூட்டுத்தாபனங்களாக அரச வடிசாலைகள் (32 சதவீதம்) தேசிய புடவை (19 சதவீதம்) அரச வளமாக்கித் தயாரிப்பு (12 சதவீதம்) இலங்கை ஒட்டுப்பலகைகள் (10 சதவீதம்) அரச அகழ்வும், கனிப்பொருள் அபிவிருத்தியும் (2 சதவீதம்) என்பன விளங்கின. வெளியீட்டு மட்டங்களில் வீழ்ச்சிகளை இலங்கை தோற்பொருட்கள் உற்பத்திகள் (39 சதவீதம்) இலங்கை உருக்கு (31 சதவீதம்) அரச மரம் (27 சதவீதம்)

அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் *




இலங்கை மத்திய வங்கி

* 24 பெரும் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீட்டைப் பிரதிபலிக்கிறது.

தேசிய உப்பு (23 சதவீதம்) இலங்கை டயர் (19 சதவீதம்) இலங்கைச் சீனி (18 சதவீதம்) இலங்கைச் சீமெந்து (15 சதவீதம்) தேசிய தாள் (13 சதவீதம்) இலங்கை எண்ணெய்க் கொழுப்பு (12 சதவீதம்) பரந்தன் இரசாயனங்களும் இலங்கை மட்பாண்டமும் (ஒவ்வொன்றும் 11 சதவீதம்) அரச வன்கலம் (7 சதவீதம்) போன்ற கூட்டுத்தாபனங்களும், தேசிய பாற்சபையும் (11 சதவீதம்) பதிவு செய்தன.

இந்த வீழ்ச்சிகளுக்கு பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன. உருக்கு, தாள் கூட்டுத்தாபனங்கள் மூலப்பொருட்களின் குறைந்த வழங்கலின் காரணமாக உற்பத்தியில் பிரச்சினைகளை எதிர்நோக்கின. தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியானது, பாதகமான வானிலை நிலைமைகளினால் இரண்டாவது அறுவடையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக வீழ்ச்சியடைந்தது. இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியானது நலத்துறைப் பொருட்கள் தயாரிப்புத் தொழிலகம் தற்காலிகமாக மூடப்பட்டமையாலும், சந்தைப் பிரச்சினைகளால் பலவர்ண ஓடுகள் மின்கடத்திகள் போன்ற விடயங்களில் ஏற்படுத்தப்பட்ட உற்பத்திக் கட்டுப்பாடுகளினாலும் ஏற்பட்டது. இருப்புக்களின் மெதுவான அசைவினாலும், தொழிற்பாட்டுப் பிரச்சினைகளினாலும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தக் கட்டாயப் படுத்தப்பட்டது.

விற்பனைகளினைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையான கூட்டுத்தாபனங்கள் 1983 இன் விற்பனைச் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளன. கிடைக்கப்பெறக்கூடிய தரவுகளின்படி தத்தம் விற்பனைச் செயலாற்றத்தில் முன்னேற்றங்களைக் கொண்டிருந்த கூட்டுத்தாபனங்களில் அரச வடிசாலைகள், அரச அகழ்வும் கனிப்பொருள் அபிவிருத்தியும், அரச வன்கலம், இலங்கை எண்ணெய்க் கொழுப்பு, இலங்கை கனிப்பொருள், இலங்கை தோற்பொருட்கள், அரச மரம், இலங்கை ஒட்டுப்பலகை, தேசிய தாள் ஆகியவை அடங்கும். இறக்குமதிகளிலிருந்தான போட்டிகளின் விளைவாக ஏற்பட்ட சந்தைப் பிரச்சினைகள் இலங்கை உருக்குக், கூட்டுத்தாபனத்தின் விற்பனைகளை மோசமாகப் பாதித்தன.

1984 இல் பெரும்பாலான கூட்டுத்தாபனங்கள் இலாபங்களைப் பதிவு செய்ததற்குத் தற்பொழுது அரச தொழில் முயற்சிகளில் காணப்பட்ட வர்த்தக ரீதியில் ஆற்றல் மிக்க முகாமைத்துவமானது பொறுப்பாகவிருந்தது. அவற்றில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்னெப்பொழுதுமில்லாதவாறு, ரூ. 17,170 இலட்சம் இலாபத்தினைப் பதிவு செய்தது. மசகெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் 1983 இன் விலை உயர்வுகளும் இக் கூட்டுத்தாபனத்தின் சாதகமான தொழிற்பாட்டிற்கு உதவின. 1984 இல் இலாபங்களைப் பதிவு செய்த ஏனைய அரசதுறைத் தொழில் முயற்சிகளில் தேசிய உப்பு, இலங்கைத் தோற்பொருட்கள், அரச வடிசாலைகள், அரச மரம், தேசிய தாள், இலங்கை கனிப்பொருள் மணல், அரச அகழ்வும், கனிப்பொருள் அபிவிருத்தியும் போன்ற கூட்டுத்தாபனங்கள் விளங்கின. இலங்கை உருக்கு, அரசவன்கலம், இலங்கைச் சீனி, அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனங்கள், மீளாய்வின் கீழான ஆண்டில் தொடர்ந்தும் நட்டத்தினை அடைந்தன. அத்துடன் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனமானது கடந்த ஆண்டில் இலாபத்தினைப் பதிவு செய்ததுடன் 1984 இல் நட்டத்தினை அடைந்தது. பொதுவாக பொறித்

தொகுதிகள் பழுதடைதல், மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, மோசமான வானிலைத் தன்மைகள், தேர்ச்சிபெற்ற ஆளணிப் பற்றுக்குறை தொழிற்படும் மூலதனத்தின் போதாத தன்மை போன்ற நிதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றினலேற்பட்ட பிரச்சினைகள் இக்கூட்டுத்தாபனங்களின் திருப்திகரமற்ற தொழிற்பாட்டுக்கு பெரிதும் காரணமாக இருந்தன.

*1984* இல் அரச துறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான அரச மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. *10,360* இலட்சத்திற்கு வகைகூறியதும், இவை, ரூ. *4,600* இலட்சம் மூலதன மாற்றல்களையும், ரூ. *5,760* இலட்சம் நடைமுறை மாற்றல்களையும் உள்ளடக்கியிருந்தன. இலங்கை சீனி, தேசிய புடவை, இலங்கை எண்ணெய்க் கொழுப்பு, அரச வளமாக்கித் தயாரிப்பு, போன்ற கூட்டுத்தாபனங்களும் தேசிய பாற்சபையும் இந்த மாற்றல்களின் முதன்மைப் பெறுநர்களாக விளங்கின.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

*1984* இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினல் பதினைந்து செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், *1984* இன் இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 199 ஆகியது. இவற்றில் *112* தொழில் முயற்சிகள் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் கைத்தொழில்களை நிறுவுவதற்கான உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளன. மொத்தம் *74* தொழில் முயற்சிகள் (அவற்றில் *62* கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உள்ளன) வர்த்தக ரீதியிலான உற்பத்திகளில் ஈடுபட்டிருந்தவேளையில் *32* தயாரிக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளில் தொழிலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை *1983* திசெம்பரில் *26,053** உடன் ஒப்பிடுகையில் *1984* திசெம்பரில் *29,251** ஆக விளங்கியது. ஆடைகள் துறையில் பெருமளவு எண்ணிக்கையான செயற்றிட்டங்கள் இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளில் செயற்றிட்டங்களுக்கான ஒப்புதல்கள் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் கைத்தொழில் நடவடிக்கையில் வரவேற்கத்தக்க அதிகரித்த பன்முகப்படுத்தும் போக்கினைக் காட்டியது.

*1984* இல் ஒப்புதலளிக்கப்பட்ட பதினைந்து செயற்றிட்டங்களில் புடவை மற்றும் தயாரிப்பில் ஒவ்வொன்றிலும் நான்கும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்தியில் மூன்றும், பணிகளில் இரண்டும், இரசாயன உற்பத்திகளிலும், மரமும் மர உற்பத்திகளிலும் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக விளங்கின. ஆடைவகை, விளையாட்டுத்துறைப் பொருட்கள், இறப்பர் அடிப்படையிலான பொருட்கள் வாசனை தொடர்பான பொருட்கள், மென்பொறியியல் உற்பத்திகள், மின்னியல் கூறுகள் மின் பொருத்துக்கள் போன்ற பரந்த வகையிலான உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதிக்கெனத் தயாரிக்கப்பட்டன.

---

* வரையறுக்கப்பட்ட ஏயர் லங்காவின் தொழில்நிலை நீங்கலாக.

## அட்டவணை 1.19

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதிமாற்றல்கள் 1982 -- 1984

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள் / முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1984* | 1982 | 1983 | 1984* | 1982 | 1983 | 1984* |
| 1. தேசிய பாற்சபை ... ... | 10.7 | 9.0 | 7.5 | 45.9 | 21.3 | 25.1 | 56.6 | 30.3 | 32.6 |
| 2. இலங்கை எண்ணெய், கொழும்பு ... | 10.9 | 25.3 | 99.1 | — | — | — | 10.9 | 25.3 | 99.1 |
| 3. இலங்கைச் சீனி ... ... | 75.4 | 122.5 | 168.8 | — | — | 7.1 | 75.4 | 122.5 | 175.9 |
| 4. தேசிய புடவை ... ... | — | 31.5 | 127.2 | — | 32.7 | — | — | 64.2 | 127.2 |
| 5. தேசிய தாள் ... ... | — | — | 5.6 | 10.0 | — | — | 10.0 | — | 5.6 |
| 6. அரச இறப்பர் தயாரிப்பு ... ... | — | — | — | 0.7 | — | — | 0.7 | — | — |
| 7. அரச வளமாக்கி தயாரிப்பு ... ... | 300.0 | — | — | 543.0 | 494.7 | 537.3 | 843.0 | 494.7 | 537.3 |
| 8. இலங்கை உருக்கு ... ... | — | 39.1 | — | — | — | — | — | 39.1 | — |
| 9. அரச வன்கலம் ... ... | — | — | — | — | 0.4 | — | — | 0.4 | — |
| 10. தேசிய பொதியிடல் பொருட்கள்... ... | — | — | — | 2.5 | 7.7 | 1.0 | 2.5 | 7.7 | 1.0 |
| 11. அரச அச்சகம் ... ... | — | — | 51.6 | — | — | — | — | — | 51.6 |
| 12. வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன் ... | — | — | — | 2.6 | 8.7 | 6.1 | 2.6 | 8.7 | 6.1 |
| மொத்தம் ... | 397.0 | 227.4 | 459.8 | 604.7 | 565.5 | 576.6 | 1,001.7 | 792.9 | 1,036.4 |

* தற்காலிகமானவை.

மூலம்: திறைசேரி.

அட்டவணை 1.20

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் — தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்
1983 – 1984

| வகை | 1983 | | 1984 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதியில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (கஎபெ) ரூ.ப.இ. | தொழில் நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதியில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (கஎபெ) ரூ.ப.இ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 30 | 41.7 | 30 | 116.0 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோல் உற்பத்திகள் ... | 22,389 | 1,917.4 | 25,041 | 2,889.1 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 64 | 1.6 | — | 0.1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | — | — | — | — |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 760 | 108.6 | 1,652 | 136.3 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் ... | 85 | 5.6 | — | 2.7 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | — | — | — | — |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி, போக்குவரத்து ... | 606 | 92.6 | 234 | 85.8 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வே.எ.கு.)... | 1,762 | 81.4 | 1,934 | 108.0 |
| 10. பணிகள் (ஆ) ... | 357 | 170.0 | 360 | 199.4 |
| மொத்தம் ... | 26,053 | 2,418.9 | 29,251 | 3,537.4 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ஏயர் லங்கா தவிர்ந்த.

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1984 இல் ரூ. 11,190 இலட்சத்திற்கு (சிஎஉ 490 இலட்சம்) 46 சதவீதத்தால் அதிகரித்தது. தைக்கப்பட்ட ஆடைகளும், காலணித் துறையும் கடந்த ஆண்டினைப் போலவே 1984 இலும் அதியுயர்ந்த அளவு ஏற்றுமதி வருவாய்களை (50 சதவீதம்) பெற்றிருந்தன. இத்துறையில் ஒரு ஊழியருக்கான ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 30 சதவீதத்தால் அதிகரித்தன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த ஏனைய துறைகளாகக் குடிவகைகளும், புகையிலை உற்பத்திகளும், உருக்கும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளும், பிளாத்திக்கு உற்பத்திகளும் விளங்கின.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் இரண்டாவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், பியகமவில் 450 ஏக்கர் பரப்பளவினை உள்ளடக்கியதாக தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த வலயம் 1985 இல் தொழிற்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள மாதிரியான உள்ளமைப்பு வசதிகளைக் கொண்டதாகவிருக்கும் என்றும் நம்பப்படுகின்றது.